# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## இரண்டாந் தவணைப் பரீட்சை 2019
## சித்திரக்கலை

தரம்: 11 சுட்டெண்:………………………… நேரம்: 1 மணித்தியாலம்

### பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.**
- **கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1தொக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**



1. மேலே காட்டப்பட்டுள்ள இக்கட்டடம் …………………………… என அழைக்கப்படுகின்றது.

2. இப் பழைமையான ஆலயம் தென்னிந்திய ………………………… கட்டடக்கலை மரபில் கட்டப்பட்டது.

3. இவ்வாலயத்தை நிர்மாணித்த மன்னன்…………………………………………… ஆவார்.

4. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்தில் கல்லாலான ………………………………… காணப்படுகின்றது.

5. இவ்வாலயம் கட்டுவதற்கு ……………………………… ஊடகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- **6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

6. கன்வஸ் தளத்தில் எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட 'தச்சனின் வீடு' என்னும் ஓவியம் தற்பொழுது எங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது?

…………………………………………………………………………………………

7. கண்டி ஆவணி ஊர்வலத்தை கருப்பொருளாகக் கொண்டு வரையப்பட்ட (பெரகரா) ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?

…………………………………………………………………………………………

8. கே. கனகசபாபதியின் ஆரம்பகாலச் சித்திரங்களில் ஐரோப்பிய யதார்தவாத கலை ஆக்கங்களின் செல்வாக்கு காணப்பட்டதாயினும் பிற்கால ஆக்கங்களில் செல்வாக்கு செலுத்திய கலைப்பாணி யாது?

…………………………………………………………………………………………

Education கல்வி

kalvi.lk

9. பிக்காசோவினால் வரையப்பட்டதும் கனவடிவவாத போக்கின் முதலாவது படைப்பாகக் கருதப்படுவதுமான ஆக்கம் எது?

……………………………………………………………………………………………

10. ''சிரித்திரன்'' என்னும் செய்தித் தாளை வெளியிட்டதோடு அச் செய்தித்தாளிற்கு காட்டூன் படங்களை வரைந்த கலைஞர் யார்?

……………………………………………………………………………………………

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. ''சகுந்தலை'' என்னும் ஓவியத்தை வரைந்த கலைஞர் மார்க் ஆவார். இந்த ஓவியத்தில் அவர் பயன்படுத்திய வர்ண ஊடகம்,

 1. நீர் வர்ணம் 2. அக்ரலிக் வர்ணம் 3. பஸ்ரல் வர்ணம் 4. எண்ணெய் வர்ணம்

12. எளிமையான, நவீன வடிவங்களைக்கொண்ட பற்ரிக் (Batik) ஆக்கங்களுக்கான ஆரம்பகால முன்னோடிக் கலைஞர்,

 1. சுமண திசநாயக்க 2. கருணாரத்ன 3. தரணியகல 4. திஸ்ஸ ரணசிங்க

13. புத்தக அட்டை வடிவமைப்பில் புதிய சோதனைகளைச் செய்த அவர் கல்வி வெளியீட்டு திணைக்களப் பாடநூல்கள் உட்பட பல்வேறு நூல்களுக்கான அட்டைப் படங்களை வடிவமைத்த கலைஞர்,

 1. மென்டிஸ் 2. ஜோர்ச்கீற் 3. மார்க் 4. சிவசுப்பிரமணியம்

14. இதுவரையில் காணப்பட்ட கட்புல யதார்த்த தன்மையிலிருந்து வேறுபட்ட கருத்து நிலையான உருவங்களைச் சிற்பக்கலையில் அறிமுகஞ் செய்த பெருமைக்குரியகலைஞர்,

 1. ஹென்றி மூர் 2. போல் செசான் 3. டேவிட் பெயின்ரர் 4. மைக்கலாஞ்சலோ

15. 43ஆம் குழுவின் உறுப்பினர்களைக் காட்டும் காட்டூன் சித்திரம் மிகச் சிறந்த படைப்பாகும். இதனை வரைந்த காட்டூன் கலைஞர்,

 1. கமிலஸ் பெரேரா 2. யூனுஸ் 3. விஜயசோம 4. ஒப்ரி கொலற்

- **16 தொடக்கம் 20 வரையில் தரப்பட்ட ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.**

16. முற்குறுக்கம்……………………………………………………………………

17. யூனுஸ்…………………………………………………………………………


18. அல்ராமீரா………………………………………………………………………

19. தூரதரிசனம்……………………………………………………………………


20. வீராசனம்………………………………………………………………………


- 21 தொடக்கம் 25 வரையில் தரப்பட்டுள்ள ஓளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை எதிரிலுள்ள **A,B,C,D,E** ஆகிய உருக்களில் இருந்து தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

21.  …………  **A**

22.  …………..  **B**

23.  …………  **C**

24.  …………..  **D**

25.  ……………  **E**

Education கல்வி

- **26 தொடக்கம் 30 வரையிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களையிட்டுப் பூரணப்படுத்துக.**

26. அரச குடும்ப செதுக்கலில் அரச ஆடையணிந்து மத்தியில் இருக்கும் உருவம் ……………………………………… ஆகும் என பரணவிதான அவர்கள் குறிப்பிடுகின்றார்.

27. சிகிரியா ஓவியங்கள் சாந்து உலர முன் ஓவியங்கள் வரையப்பட்டதாக நம்பப்படுகிறது. அந் நுட்பமுறை……………………………………..எனப்படும்.


28. அநுராதபுர பன்குளிய புத்தர் சிலையின் வலது கையில் காட்டப்பட்டுள்ள முத்திரை ………………………………………… ஆகும்.

29. ஜீ.எஸ்.பர்ணாந்து வரைந்த விஜயோத்பாய என்ற சித்திரம் வரையப்பட்ட வர்ண ஊடகம்……………………………………..ஆகும். இவ்ஓவியம் கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

30. சுத்தசோம ஜாதகக் கதையில் பிரமத்த அரசியின் அரண்மனைப் பெண்கள் இருவர் அளவளாவும் காட்சி ……………………………………தாழ்நில விகாரையில் வரையப்பட்டுள்ளது.

- **31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு F,G,H,I ,J ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**







F G H I J

31. F எழுத்தால் காட்டப்பட்டுள்ள வீனஸ் என்ற சிற்பம் …………………………ஊடகத்தால் செய்யப்பட்டுள்ளது.

32. G எழுத்தால் காட்டப்பட்டுள்ள சிற்பம் சலவைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இது ………………………………………தேவாலயத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

33. H எழுத்தால் காட்டப்பட்டுள்ள சுண்ணக்கல் சிற்பம் …………………………… என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

34. I எழுத்தால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை…………………………கலைப் பண்பை வெளிப்படுத்தி நிற்கின்றது,

35. J எழுத்தால் காட்டப்பட்டுள்ள பராக்கிரமபாகு சிற்பம் அதன் உடல் நிலைக்கேற்ப ……………………….. நிலையில் நிற்கின்றது.

- **இங்கு காணப்படும் ஓவியத்தை இனங்கண்டு அதன் கலைப்பண்புகளை பகுப்பாய்வு செய்யும் விதத்தில் 36 தொடக்கம் 40 வரை தரப்பட்டுள்ள உப தலைப்புக்களுக்கு அமைவாக பொருளுள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



36. இடமும் கலைஞரும் ..............................................................................................................

..............................................................................................................................................

37. தொனிப் பொருள்..............................................................................................................

..............................................................................................................................................

38. கோடுகள், வர்ணங்களின் பயன்பாடு ..............................................................................

..............................................................................................................................................

39. ஒழுங்கமைப்பு......................................................................................................................

..............................................................................................................................................

40. உணர்வுவெளிப்பாடு..............................................................................................................

..............................................................................................................................................

(40X1=40 புள்ளிகள்)

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாந் தவணைப் பரீட்சை 2019**
**சித்திரக்கலை**

**தரம் 11** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**பகுதி - II**

**முக்கியம்::-**

- விடைத்தாள் பின்பக்கத்தில் இடதுபக்க மேல்மூலையில் உங்கள் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
- பரீட்சை மேற்பார்வையாளிடம் ஒப்படைக்கும் போது உங்கள் வரைதல் தாள் உலர்ந்திருக்க வேண்டும்.

சுயாதீன ரேகைச் சித்திரம் வரைதல்

- உங்களுக்கு முன்னாலுள்ள பொருள்களை அவதானிக்குக.
  1. பருமட்டான தாளைப் பயன்படுத்தி பூர்வாங்க பரும்படிப்படத்தை வரைக.
  2. நீங்கள் காணும் விதத்தில் பொருள்களை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்கு வெள்ளை வரைதற் தாளைப் பயன்படுத்துக.
- இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்குக.
- உங்கள் வரைதலை மதப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்பதைக் கவத்தில் கொள்க.
  - சுயாதீன ரேகை கற்கை :-
    1. பரும்படியான தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் உங்கள் திறன்
  - வர்ணச் சித்திரம் :-
    2. தளத்துக்கு உதந்ததாக கலைநுட்பத்துடன் பொருட்கள் தொகுக்கப்பட்டிருத்தல்
    3. அளவிடைகள் , தூரநோக்கு , முப்பரிமாண விளைவு பற்றிய உமது விளக்கம்
    4. தரப்பட்டுள்ள பொருள்களின் பண்புகளை எடுத்துக் காட்டல்
    5. வர்ண ஊடகங்களை கையாளும் திறன்
    6. ஒட்டு மொத்த நேர்த்தியும் பொருத்தமான பின்னணியும்

**மிகமுக்கியம்** :

பொருள்களின் தொகுயை வைத்துள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருள்களின் தொகுதிக்குப் பொருந்தும் முறையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களிற்கு சுதந்திரம் உண்டு.

(30புள்ளிகள்)

kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இரண்டாந் தவணைப் பரீட்சை 2019
சித்திரக்கலை

தரம் 11 நேரம்: 2 மணித்தியாலங்கள்

.

பகுதி - II

ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக



## தேவையான பொருட்கள்

1. பெட்டி
2. சிறிய பானை
3. நீலநிற நீர் அரைவாசிக்கு நிறைந்த போத்தல்
4. சீத்தைத்துணி
5. இளநீர் காம்புடன்
6. அந்தூரியம்

kalvi.lk

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாந் தவணைப் பரீட்சை 2019**
**சித்திரக்கலை**

**தரம் 11** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

பகுதி - III

**அ, ஆ, இ ஆகிய பகுதிகளுள் ஏதெனும் ஒன்றிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

**கவனிக்க:**

பின்வரும் ஊடகங்களுள் எவற்றையேனும் பயன்படுத்துவதற்கு நீங்கள் அனுமதிக்கப்படுகின்றீர்கள். போஸ்ரர்வர்ணம், பஸ்ரல்வர்ணம், நீர்வர்ணம் போன்ற பொருத்தமான ஊடகம்.

**பகுதி அ – சித்திர ஒழுங்கமைப்பு**

1. வழிபாட்டு இடம் ஒன்றில் பூக்களை விற்பனை செய்யும் பெண் வியாபாரி ஒருவரிடமிருந்து பூக்களை கொள்வனவு செய்யும் பக்தர்கள்.
2. பயிர்ச்செய்கை நிலத்திலுள்ள கிணறு ஒன்றில் விழுந்த யானை ஒன்று கிராமவாசிகளால் மீட்கப்படல்.
3. கடலுக்குச் செல்லத் தயாராகும் மீனவர்கள்.
4. கிராமத்து தேநீர்க் கடை.

**பகுதி ஆ – அலங்கார ஆக்கம்**

5. எட்டு பகுதிகளைக் கொண்ட குடைத்துணி ஒன்றுக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றினை மத்திய புள்ளியைச் சுற்றி பரவலடையும் விதத்தில் நிர்மாணிக்குக.
6. கதவுக்கான திரைச் சீலை ஒன்றுக்கு பொருத்தமான அழகிய அலங்காரம் ஒன்றினை நிர்மாணிக்குக.
7. பூக்களையும் இலைகளையும் பயன்படுத்தி சீத்தைத் துணி அலங்காரம் ஒன்றினை நிர்மாணிக்குக.

**பகுதி இ - கிறபிக் சித்திரம்**

8. பாடசாலையில் நடைபெறும் வருடாந்த கலை விழா ஒன்றுக்கான விளம்பரப் பலகை ஒன்றினை நிர்மாணிக்குக. பின்னணி சித்திரக் குறிப்புக்களுடன் பெயர்,திகதி,நேரம்,இடம் என்பவற்றையும் உள்ளடக்குக.
9. என் மனங்கவர்ந்த ஓவியர் என்ற தலைப்பிலான புத்தகம் ஒன்றிற்கான மேலட்டை ஒன்றை நிர்மாணிக்குக.
10. கொடிய டெங்கை ஒழிப்போம் என்ற தலைப்பிலான சுவடொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.

kalvi.lk

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2019**
**சித்திரக்கலை**

**தரம் 11** **புள்ளித்திட்டம்**

## பகுதி - I

1. இரண்டாம் சிவாலயம்/வானவன் மாதேவி ஈசுரமுடையார்
2. சோழர்
3. இராஜராஜ சோழன்
4. சிவலிங்கம்
5. கருங்கல்
6. கொழும்பு கலாபவனத்தில்
7. ஸ்ரான்லி அபேயசிங்க
8. கனவடிவவாதம்
9. அவிக்நோன் யுவதிகள்
10. சி.சிவஞான சுந்தரம்/சிரித்திரன் சுந்தர்
11. பஸ்ரல்
12. சுமணதிஸநாயக்க
13. சிவசுப்பிரமணியம்
14. ஹென்றிமூர்
15. ஒப்ரிகொலஜ்
16. ஏதாவதொரு பொருளை நேரடியாகப் பார்க்கும் போது கட்டையாக அல்லது குறுக்கமாக தெரிகின்ற அமைப்பு.
17. பிரசித்தி பெற்ற காட்டூன் ஓவியர்.
18. ஸ்பானியாவிலுள்ள புராதன(கற்கால)ஓவியங்கள் கொண்ட குகை.
19. அருகிலுள்ள பொருள் பெரிதாகவும் சேய்மையில் உள்ள பொருள் சிறிதாகவும் காணப்படுவது.
20. புத்தர் சிலையின் ஆசன முறைகளில் ஒன்று, இடது காலின் மேல் வலது காலை வைத்திருப்பது போன்ற அமைப்பு,சமாதி நிலையின் ஆசன அமைப்பானது வீராசன நிலையில் அமைந்திருக்கும்.

kalvi.lk

21. D

22. C

23. B

24. E

25. A

26. துட்டகைமுனு

27. பிரஸ்கோ புவனோ / ஈரச்சுதை

28. விதர்க்க முத்திரை

29. நீர்வர்ணம்.

30. கத்தளுவ

31. சலவைக்கல்

32. புனித பீற்றர்

33. ஸ்கிறைப் / கணக்காளர்

34. குப்த

35. திரிபங்க

36. புதிய களனி விகாரை சோலியஸ் மென்டிஸ்

37. சங்கமித்தை புனித வெள்ளரசம் கிளையைக் கொண்டுவரும் காட்சி

38. முப்பரிமாணம் வெளிப்படும் விதத்தில் கோடுகள் வரையப்பட்டுள்ளது,தென்னிந்திய ஓவியப்பாணிக்கு அமைய வர்ணப் பாவனை, மஞ்சள், மண்ணிறம், கறுப்பு போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

39. மனித வடிவங்களை முன்னிலைப்படுத்தி இயற்கைக்காட்சியை பின்னணியாகக் கொண்டு ஆக்கச்சிறப்புடன் வரையப்பட்டுள்ளது.

40. வெள்ளரசு மரக்கிளையைக் கொண்டு வரும் போது தேவநம்பிய தீசன் எதிர் கொண்டு சென்று பக்தி பூர்வமாக வணங்கி வரவேற்கும் காட்சியை உணர்வு பூர்வமாக கலைஞர் வெளிக்காட்டியுள்ளார், வெள்ளரசுக்கிளையின் உயர் புனிதத்துவத்தை பக்தி பூர்வமாகக் காட்டியுள்ளார்.

பகுதி 1 - 40 புள்ளிகள்

பகுதி 11 - 30 புள்ளிகள்

பகுதி 111 - 30 புள்ளிகள்

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page